


திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் சி.வி. கணேசன் மங்களூர் கிழக்கு ஒன்றியம் கொடிக்களம் கிராமத்தில் வாக்கு சேகரித்தார். உடன் மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்தலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் கு.பிச்சாண்டி, காட்டுக்குளம் உள்ளிட்ட கிராமங்களிலும் காட்டுமலையனூர் பகுதிகளிலும் கூட்டணி நிர்வாகிகளுடன் வாக்கு சேகரித்தார்.

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் - 2026

# மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தேர்தல் பரப்புரைப் பயணம்!



**16.04.2026 வியாழன்**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
4 மணி - புளியங்குடி - தி.மு.க.
5.30 மணி - சங்கரன்கோவில் - காங்கிரஸ்
9 மணி - விருதுநகர் (பொதுக்கூட்டம்) - தே.மு.தி.க.

**17.04.2026 வெள்ளி**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி - ம.தி.மு.க.

**18.04.2026 சனி**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மொடக்குறிச்சி - ம.தி.மு.க.

**19.04.2026 ஞாயிறு**

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருநெல்வேலி - தி.மு.க.
பாளையங்கோட்டை - தி.மு.க.
மேலப்பாளையம்

**20.04.2026 திங்கள்**

கடையநல்லூர் தொகுதி - ம.தி.மு.க.
சாம்பவர் வடகரை, ஆய்குடி,
செங்கோட்டை (பொதுக்கூட்டம்)

**21.04.2026 செவ்வாய்**

சங்கரன்கோவில் தொகுதி - காங்கிரஸ்
மாலை 4மணி திருவேங்கடம் (பொதுக்கூட்டம்)

**'தாயகம்'**
*சென்னை - 8*

**தலைமைக் கழகம்**
*மறுமலர்ச்சி*
*தி.மு.க.,*

## தென்காசி தொகுதி கழக வேட்பாளர்

# டாக்டர் கலை கதிரவன் நகரப் பகுதி, ஒன்றிய பகுதிகளில் தெருத் தெருவாகச் சென்று வாக்கு சேகரிப்பு!

தென்காசி, ஏப்.16 –

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவன் 13ந் தேதி அன்று தென்காசி நகராட்சி பகுதியில் மற்றும் ஒன்றிய பகுதிகளில் தெருத் தெருவாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வின் போது தென்காசியில உள்ள இந்திய சுதந்திரப் போராட்ட தியாகி அப்துல்ஸலாம் நினைவு தூணிற்கு நகர செயலாளர் சாதிர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன் பேசியதாவது:–

தென்காசியில் ஏற்கனவே திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் தி.மு.க.அரசு சார்பில் காசி விஸ்வநாதர் திருக்கோவில் மற்றும் நகர பகுதியில் உள்ள பல்வேறு கோவில்களில் திருகுடமுழுக்கு விழா நடந்துள்ளது. ரூபாய்.69.45 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி குடிநீர் திட்டம் அலகு 2 பணிகள் நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய தினசரி மார்க்கெட் அமைக்கப் பட்டுள்ளது.ரூபாய் .2 கோடி 27 லட்சம் மதிப்பீட்டில் மாவட்ட அறிவுசார் மையம்,மாவட்ட நூலகம்,நகரத்தில் 40 இடங்களில் புதிய உயர்மின் கோபுர விளக்குகள்,நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட்டுள்ளது. புதிய குடிநீர் இணைப்புகள்,புதிய சாலைகள்,மின்விளக்கு போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்றுள்ளது. அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்நோயாளி களின் பாதுகாவலர்கள் தங்கும் இடம் மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கு பூங்கா அமைக்கப்பட்டுள் ளது.நகர பொதுமக்கள், இளைஞர்கள்,குழந்தைகள் நலன் கருதி பூங்காக்கள் பராமரித்து சீரமைத்தல் பணிகள்,கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் & நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்றுள்ளது.

மேலும் மீண்டும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் 2.0. ஆட்சி அமைந்த உடன் கழக தேர்தல் அறிக்கைகளான மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 2000 ஆக உயர்த்தப்படும்.காலை உணவு திட்டம் விரிவாக்கம் செய்யப்படும். ரூபாய் 8000 மதிப்பிலான இல்லத்தரசி கூப்பன் வழங்கப்படும். விவசாயிகளுக்கு நவீன பம்பு செட் வழங்கப்படும்.பொது மக்களுக்கு 10 லட்சம் புதிய வீடுகள் கட்டி தரப்படும். என்று கழக தலைவர் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். சொன்னதை செய்வதும் சொல்லாததை செய்வதும் தான் திராவிட மாடல் ஆட்சியாகும்.ஆகவே திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய எனக்கு உதயசூரியின் சின்னத்தில் வாக்களித்து அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். என்று கேட்டுக் கொண்டு பேசினார்.

நிகழ்வில் தி.மு.க.தேர்தல் பார்வையாளர்கள் இராஜேஸ்வரன், குற்றாலம் சுரேஷ்,மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆலங்குளம் செல்வராஜ், நகர தலைவர் மாடசாமி ஜோதிடர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நகர தலைவர் அபூபக்கர், மாநிலச் செயலாளர் முகமது அலி, நகர தே.மு.தி.க.செயலாளர் பேச்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சித்திக் , ஹக்கீம்,சந்திரன் சுப்பிரமணியன், த.மு.மு.க.நயினார் முஹம்மது, அபாபில் மைதீன், சலீம், கொலம்பஸ் மீரான், ம.ஜ.க. முகமது யாகூப்,கழக நகர நிர்வாகிகள் கிட்டு, ராம்துரை, பால்ராஜ்,மைதீன் பிச்சை, பாலசுப்பிரமணியன், ரஹ்மத்துல் லாஹ், மாவட்ட நிர்வாகிகள் தங்கபாண்டியன், அப்துல் ரஹீம், ராஜேந்திரன், பாலாமணி, மிலிட்டரி வெங்கடேசன், வார்டு செயலாளர்கள் வேம்பு, அருணாசலம், சோமசுந்தரம், பீர்முகமது, கரிகாலன், அர்ஜுனன், ராமகிருஷ்ணன்,விநாயக மணிகண்டன்,சாரதி முருகன், முத்துகிருஷ்ணன், சுரேஷ், மைதீன், அப்துல் ரசாக்,பால்துரை,பூ ஆறுமுகம்,ராமநாதன்,பழக்கடை குமார், இசக்கி ரவி, சன்ராஜா,சபரி சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன் தென்காசி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பாட்டப்பத்து,ஆயிரப்பேரி, மத்தளம்பாறை,பாட்டாகுறிச்சி, திருச்சிற்றம்பலம் ஆகிய 5 ஊராட்சி பகுதிகளுக்குச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

ஒவ்வொரு கிராமத்திலும் அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுக்கும்,மலர் தூவியும், நெற்றியில் திலகமிட்டும் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

## தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

# உடன்குடி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் க.இளங்கோ அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. **செ.மதன்ராஜ்** *(13/91, முந்திரித்தோட்டம், பரமன்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் - 628 213)* அவர்கள் உடன்குடி கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 14.04.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



# தி.மு.க. இளைஞர் அணி



## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். நான்கு கட்ட பரப்புரை முடிந்த நிலையில் ஐந்தாம் கட்ட பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**16.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | மதுரை கிழக்கு | வண்டியூர், சௌராஷ்டிராபுரம், மதுரை. |
| காலை 10.30 மணி | மதுரை வடக்கு | புதூர் பேருந்து நிலையம் அருகில், மதுரை. |
| காலை 11.30 மணி | சோழவந்தான் | பேருந்து நிலையம் அருகில், அலங்காநல்லூர். |
| மாலை 4.00 மணி | ஆண்டிப்பட்டி | பேருந்து நிலையம் அருகில், ஆண்டிப்பட்டி. |
| மாலை 4.45 மணி | போடிநாயக்கனூர் | பழனிசெட்டிபட்டி. |
| மாலை 5.45 மணி | பெரியகுளம் | புதிய பேருந்து நிலையம் பிரிவு, உட்லண்ட்ஸ் ஹோட்டல் அருகில், பெரியகுளம். |
| இரவு 7.15 மணி | நிலக்கோட்டை | கொடைக்கானல் சாலை. அம்மைநாயக்கனூர். |
| இரவு 8.00 மணி | திண்டுக்கல் | நாகல் நகர், திண்டுக்கல். |
| இரவு 8.45 மணி | வேடசந்தூர் | ஆத்துமேடு, வேடசந்தூர். |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை - 18
நாள் : 15.4.2026

கலைஞர் 100
1924 - 2023



# சிங்கம்புணரி ஒன்றியத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தீவிர வாக்கு சேகரிப்பு!

*சிவகங்கை, ஏப். 16 -*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் ஐந்தாவது முறையாக போட்டியிடும் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் சிங்கம்புணரி தெற்கு ஒன்றியத்தில் அ.காளாப்பூர், கோபால் பட்டி, காரையூர், வைர வன்பட்டி , உட்பட 100 க் கும் மேற்பட்ட கிரா மங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

சுட்டெரிக்கும் வெயிலில் வாக்கு சேகரித்த அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனை சென்ற இடங்களில் எல்லாம் பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள்.

அவருடன் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், ஒன்றிய செயலாளர் பூமணி, பொதுக்குழு உறுப்பினர் அம்பலமுத்து, நிர்வாகிகள் புகழேந்தி, மனோகரன், பாஸ்கரன் குடோன்மணி, அலாவுதீன் யாகூப், சிவகுமார் , பேரூர் கழக செயலாளர் கதிர் வேல், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபுரி சேகர், எஸ். முத்துக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் தகவல் தொழில் நுட்ப அணி காளிமுத்து, மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் சென்றிருந்தார்கள்.



திருவண்ணாமலை ஒன்றியத்தில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் எ.வ.வேலுவை ஆதரித்து, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் எ.வ.குமரன் கிராமம், கிராமமாக வாக்குசேகரித்தார். உடன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்தி வேல்மாறன், பிரியா விஜயங்கன், மெய்யூர் சந்திரன், த.ரமணன், தொ.மு.ச. சௌந்தர்ராசன் உட்பட கூட்டணி இயக்கத்தினர் உள்ளனர்.



வேலூரில் கழக வேட்பாளர் கார்த்திகேயனை ஆதரித்து மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் கழகத்தினருடன் பூ வியாபாரிகளிடம் வாக்கு சேகரித்தார்.